கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைகலாசார பீடம்

இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு
2011/2012 (AUGUST/SEPTEMBER - 2015)

# PY/S- 2222 – மேலைத்தேய மெய்யியலுக்கு ஓர் சுருக்க அறிமுகம்

# (Concise Introduction to Western Philosophy)

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து ஏதேனும் இரண்டு வினாக்களுக்கும், பகுதி II இல் இருந்து ஏதேனும் ஒரு வினாவிற்குமாக மொத்தமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக

---

## பகுதி-I

01. அ) கிரேக்ககாலச் சிந்தனைகளின் ஆரம்ப பகுதி பிரபஞ்சம் பற்றிய தேடலாக அமைந்துள்ளன என்பதை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.
(15புள்ளிகள்)

ஆ) கிரேக்ககாலச் சிந்தனையின் பிற்பகுதி சமூக செல்நெறிகளை எடுத்தியம்புவதைத் தெளிவுபடுத்துக. (15புள்ளிகள்)

02. அ) நவ-பிளோட்டோனிய சிந்தனை வளர்ச்சிக்கு புளோட்டினஸின் பங்களிப்புக்கள் எந்தவகையில் உறுதுணையாக அமைந்தன?
(15புள்ளிகள்)

ஆ) உடன்பிறந்த எண்ணங்களின் நிராகரிப்பினை எவ்வாறு தர்க்கரீதியாக லொக் தனது மெய்யியல் சிந்தனைகளினூடாக நியாயப்படுத்துகின்றார்? (15புள்ளிகள்)

03. அ) பொதுமை பற்றிய வரலாற்றுப் பார்வையை எடுத்துக்காட்டி மத்தியகாலத்தில் பொதுமை பற்றிய நிலைப்பாட்டினைத் தெளிவுபடுத்துக.
(20புள்ளிகள்)

ஆ) மறுமலர்ச்சிக்கால மெய்யியல் சிந்தனைகள் எவ்வாறு நவீன மெய்யியலின் தோற்றத்திற்கு அடிப்படையாய் அமைந்தன என்பதை தெளிவுபடுத்துக.
(10புள்ளிகள்)

## பகுதி –II

04. அறிவு பற்றிய ஆராய்ச்சியில் டேக்கார்ட்டின் அறிவுமுதல் வாதமும் லொக்கின் அனுபவமுதல் வாதமும் ஒரு புரட்சியை ஏற்படுத்தியமை விமர்சன ரீதியாக ஆராய்க.
(40புள்ளிகள்)

05. “மேலைத்தேய மெய்யியல் வரலாற்றினுடைய ஒவ்வொரு காலகட்டமும் ஒவ்வொரு பிரச்சினைகளை மையப்படுத்தியதாகவே அமைந்துள்ளது”. இக்கூற்றை விமர்சன ரீதியாக மதிப்பிடுக.
(40புள்ளிகள்)